எனது

காங்கிரஸ் யாத்திரை

(முதலியன)

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை

எழுதியது.

மானேஜர்:

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி **99,**

சென்னை.

 1924 [விலை அணா **3**.

எனது

காங்கிரஸ் யாத்திரை

(ஒரு சிறு கதை)

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை

எழுதியது.

பிரசுரகர்த்தர்.

மானேஜர்,

"லக்ஷ்மி" ஆபீஸ்,

சென்னை.

 1924. [விலை அணா 3.

எனது காங்கிரஸ் யாத்திரை.

பரீட்சைக்கு மூன்று மாதத்திற்கு முன்னர் எனக்கு வயிற்றலைச்சல் உண்டாயிற்று. சரித்திரப் பகுதியில் ஆனர்ஸ் பி. ஏ. சாமானிய பரீட்சையா? படிக்க வேண்டிய புஸ்தகங்களோ எனக்கு நான்கு சுமடுப் பாரமுண்டு. ஆனர்ஸ் பி. ஏ. முதல் வகுப்பில் தேறவேண்டுமென்பது எனது அதி தீவிரமான ஆசை. ஆகவே இரவும் பகலும் இடைவிடாது வாசிக்கத் தொடங்கினேன். கிரிக்கட், கால் பந்து விளையாட்டு முதலியவைகளைக் கனவிலும் நினைப்ப தில்லை. ஸ்நான பானாதிகளில் கூட உபேட்சையாகவே இருந் தேன். ஆகவே பரீட்சைக்கு மூன்று மாதத்துக்கு முன் கடினமான வயிற்றலைச்சல் உண்டாயிற்று. பிரசித்தி பெற்ற டாக்டர். டி. யம். நாயரின் சிகிற்சையால் இரண்டு வாரத்துக்குள் நோய் சொஸ்தப் பட்டதானாலும் உடம்பு தேற வெகு நாளாயிற்று. நோய் தீர்ந்தவுடன் என்னை என் சுதேசமாகிய திருநெல்வேலிக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் அவ் வருஷத்திய பரீட்சைக்குச் சேர வேண்டாமென்றும், என் தகப்பனார் பிடிவாதமாய்ச் சொன் னார். ஆனால் நான் சம்மதிக்கவில்லை. செத்தாலும் சரி, பிழைத்தாலும் சரி, பரீட்சையில் சேர்ந்தே தீரவேண்டு மென்று நானும் குரங்குப் பிடியாய்ப் பிடித்தேன். தகப் னார் என்னிடம் மிகுந்த பட்ச முடையவ ராகையால் நானே ஜெயம் கொண்டேன். ஆனால் என்னைப் பேணும் பொருட்டு, பரீட்சை முடியும் வரையில் தகப்பனார் என்கூடவே சென்னை

யில் தங்கினர். பரீட்சை முடிந்ததும் இருவரும் திரு நெல்வேலிக்குச் சென்ருேம். அவ்விடம் டாக்டர் ஸ்ரீமாந் அப்பாவு பிள்ளையவர்கள் அபிப்பிராயப் படி குற்றாலத் தில் ஒரு பெரிய பங்களா வாடகைக் கெடுத்து அங்கே இரண்டு மாதம் தங்கினேன். உடம்பும் ஒருவாறு சுக மடைந்தது.

அதற்குள் பரீட்சா பலமும் வெளிவந்தது. முதல் வகுப்பில் சென்னை ராஜதானியில் இரண்டாவதாக வெற்றி யடைந்தேன். சென்னை லாகாலேஜில் சேரவேண்டுமென்று நான் பிரயத்தினம் செய்தேனுலும், உடம்பு சரியாய்த் தேறவில்லை யென்ற காரணத்தினுல் அப்பா சம்மதிக்க வில்லை. ஆகவே அவ்வொரு வருஷத்தையும் ஓய்வு வருஷ மாகக் கழிக்கத் தீர்மானித்தேன்.

என் தகப்பனர் தண்டபாணி ஐயர் ஒரு பழைய காங் கிரஸ் புலி. நல்ல 'பிராக்டிஸ்' உடைய வைக்கீலாகையால் 40 வயதுக்கு முன்னரே நாலேந்து லட்சம் சம்பாத்தியம் செய்தார். பிறகு சம்பாத்திய விஷயத்தில் அவ்வளவு கவ னம் செலுத்தவில்லை. தேச கைங்கரியங்களிலே தான் தன் முழு நேரத்தையும் போக்கத் தொடங்கினர். ஆண்டு தவருமல் காங்கிரஸுக்குப் போய் அதன் நடபடிக்கை களில் மிகவும் பொறுப்பான பாகங்களை வகித்து வந்தார். வங்காளப் பிரிவினை காலத்தில் தென்னிந்திய அமிதவாதி களில் இவரே முதன்மை பெற்றவராகக் கருதப்பட்டார். வங்காளப் பிரிவினையைக் கண்டித்துப் பேசத் திருநெல் வேலியில் கூடிய கூட்டத்தில் அவர் அக்கிராசனம் வகித்துப் பேசிய பேச்சுகளை நினைக்கும் பொழுது இன்

றும் டெல்லி வாசிகள் மெய் நடுக்கம் கொள்கின்றனர். சென்னைக் கவர்னர் அவரை உடனே நாடு கடத்தவேண்டு மென்று வைஸ்ராய்க்கு எழுதினாராம். ஆனால் எனது பிதாவின் செல்வாக்கையும் ஜனசம்மத முடைமையையும் செவ்வையாய் அறிந்திருந்த இராஜப் பிரதிநிதி அதற் கிணங்கவே இல்லை. ஏனென்றால் என் பிதாவை நாடு கடத்தினால் தென்னிந்தியா முழுதும் துரைத்தனத்தாருக்கு விரோதமாக எழும்புமென்று அவருக்கு நன்றாய்த் தெரியும்.

இத்தகைய அமிதவாதச் சங்கமாக விளங்கிய என் தகப்பனாருக்கு, வயதேற ஏற உடம்பு க்ஷீணித்து வந்தது போலவே அவரது அபிப்பிராயங்களும் மாறுதலடையத் தொடங்கின. முதலில் துரைத்தனத்தாருக்கு அப்ரீதி கொடுக்கக்கூடிய விஷயங்களில் கலக்காது ஒதுங்கி வந்தார். பிறகு, எவ்விஷயத்திலும் துரைத்தனத்தாரைத் தாங்கி நடப்பதே குடிகளின் கடமை யென்னும் கொள்கை யுடை யவரானார். மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்த ரிப் போர்ட்டு வெளிவந்ததோடு என் பிதா ஒரு பழுத்த மித வாதியாய்விட்டார். பம்பாயில் கூடிய மிதவாதிகள் 'காண் பரன்ஸில்' அவர் அமிதவாதிகளைப் பற்றிப் பேசிய பேச்சு கள் பரம தூஷணைமயமாக இருந்ததனால் அவைகளை 'காண் பரன்ஸ் புரோஸீடிங்ஸில்' கூட சேர்க்காது தள்ளிவிட்டார் களாம்.

புலிக்குட்டி பூனைக்குட்டி ஆகலாமா? நான் என் பிதா வின் முதல் புத்திரனாகையால் அவரது ஜீவியத்தின் முதல் பாகத்தில் அவர் கொண்டிருந்த கொள்கைகளையே நானும் இயல்பாகக் கொண்டிருந்தேன். என் பிதா பழுத்த மித

வாதியான காலத்தில் நான் பச்சை அமிதவாதி அல்லது 'நாஷனலிஸ்டாக' இருந்தேன். பம்பாய் மிதவாதிகள் காண்ப்ரன்ஸில் அவர் செய்த பிரசங்கம் பத்திரிகைகளில் வெளிவந்தபொழுது நான் கண்ணீர் விட்டு அழுதேன். எனது சிநேகிதர்களெல்லாம் என்னைக் கேலி பண்ணினார்கள். வெளியில் இறங்க வெட்கப்பட்டு என் அறைக்குள்ளேயே உட்கார்ந்திருந்தேன். அப்பா பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்தபொழுது எனக்கும் அவருக்கும் ராஜீய விஷயமாக ஒரு பெரிய வாதப் பிரதிவாதம் உண்டாயிற்று. எங்கள் வாதப் பிரதிவாதப் போராட்டத்தை எனது சிநேகிதர்கள் கிருஷ்ணார்ச்சுன யுத்தத்துக்கு ஒப்பிட்டார்கள். கடைசியாக என் பிதா "அடே! உன் பால்யக் கொழுப்பினால் இப்படி உளறுகிறாய். நானும் உன்னைப்போல் கோடிப்பாம்பாக இருந்தபொழுது இதைவிட அதிகமாகப் பேசினவன் தான். உலக அநுபவம் முதிர முதிர எனக்கு நல்லறிவு வந்தது. அதுபோலவே உனக்கும் நற்புத்தி வரும்," என்று சமாதானம் கூறினார்.

"வயதாக ஆக அபிப்பிராயம் மாறுமானால் நான் இந்தச் சிறு வயதிலேயே இறக்க விரும்புகிறேன்" என்று நான் வெடுக்கெனப் பதிலுரைத்தேன்.

தகப்பனுருக்கும் மகனுக்குமுள்ள சண்டை எத்தனை நாள் நிலை நிற்கும்? அன்றிரவு போஜனம் செய்த காலத்தில் இருவரும் ராஜியாய்ப் போனோம்.

பரீட்சை கழிந்து திருநெல்வேலியில் தங்கிய காலத்தில் எங்கள் வாதப் பிரதிவாதம் தலையெடுத்தது. டெல்ஹி காங்கிரஸுக்குப் போகவேண்டுமென்று நான் பிடிவாத

மாய்ச் சொன்னேன். நான் ஒருபொழுதும் போகக் கூடா தென்று அவர் தடுத்தார். அவர் தடுக்கத் தடுக்க எனக்கு வீராவேசம் அதிகப்பட்டது. இறுதியில் அவர் சம்மதம் பெறாமலே போவதற்கு உறுதி செய்தேன்.

ஆனால் யாத்திரைச் செலவுக்குப் பணம் வேண்டுமே! நாஷணலிஸ்டு கட்சியாருக்கு டிக்கற்று இனமாகக் கிடைக் குமா?

என் கையிருப்பைத் திட்டம் செய்ததில் 1ரூபா 3அணு 10பை இருந்தது. இது எதற்குப் பற்றும்? அப்பாவைக் கேட்டால் ஒரு சல்லிக் காசு கூடக் கொடுக்கமாட்டார். அவர் பெட்டிக்குள் "கறன்ஸி" நோட்டுகள் ஏராளமாக வுண்டு. பெட்டிச் சாவியைக் கைவசப் படுத்தவேண்டு மானால் அதிகப் பிரயாசை யில்லாமலே முடியும். ஆனால் சென்னைச் சர்வகலா சங்கத்தின் 'டிப்ளோமா' தாரியாகிய எனக்குத் திருடுவதற்கு மனத்துணிவு வரவில்லை. என் அம்மா கையிலும் ஏராளமாகப் பணமுண்டு. ஆனால் காங்கிரஸ் யாத்திரைக்குப் பணம் கேட்டால் கொடுப் பாளா? அப்பா என்னைத் தடுத்த சமாசாரமும் அவளுக் குத் தெரியும். இதற்கு என்ன செய்கிறதென்று யோசித் துப் பார்த்தேன்.

'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி, அவள் மனப் போக்கெல்லாம் எனக்குச் செவ்வையாகத் தெரியு மாகையால் ஒரு யுக்தி தற்சமயம் தோன்றிற்று. உடனே மனோல்லாஸ முடையவனாகி அம்மாளண்டை சென்றேன்.

"அம்மா! எனக்கு டெல்ஹி காங்கிரசுக்கு எப்படி யாவது போய்த் தீரவேண்டும்; அப்பாவோ தடுக்கிறார்.

வாதியான காலத்தில் நான் பச்சை அமிதவாதி அல்லது 'நாஷனலிஸ்டாக' இருந்தேன். பம்பாய் மிதவாதிகள் கான்ப்ரன்ஸில் அவர் செய்த பிரசங்கம் பத்திரிகைகளில் வெளிவந்தபொழுது நான் கண்ணீர் விட்டு அழுதேன். எனது சிநேகிதர்களெல்லாம் என்னைக் கேலி பண்ணினார்கள். வெளியில் இறங்க வெட்கப்பட்டு என் அறைக்குள்ளேயே உட்கார்ந்திருந்தேன். அப்பா பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்தபொழுது எனக்கும் அவருக்கும் ராஜீய விஷயமாக ஒரு பெரிய வாதப் பிரதிவாதம் உண்டாயிற்று. எங்கள் வாதப் பிரதிவாதப் போராட்டத்தை எனது சிநேகிதர்கள் கிருஷ்ணார்ச்சுன யுத்தத்துக்கு ஒப்பிட்டார்கள். கடைசியாக என் பிதா "அடே! உன் பால்யக் கொழுப்பினால் இப்படி உளறுகிறாய். நானும் உன்னைப்போல் கோடிப்பாம்பாக இருந்தபொழுது இதைவிட அதிகமாகப் பேசினவன் தான். உலக அனுபவம் முதிர முதிர எனக்கு நல்லறிவு வந்தது. அதுபோலவே உனக்கும் நற்புத்தி வரும்," என்று சமாதானம் கூறினார்.

"வயதாக ஆக அபிப்பிராயம் மாறுமானால் நான் இந்தச் சிறு வயதிலேயே இறக்க விரும்புகிறேன்" என்று நான் வெடுக்கெனப் பதிலுரைத்தேன்.

தகப்பனாருக்கும் மகனுக்குமுள்ள சண்டை எத்தனை நாள் நிலை நிற்கும்? அன்றிரவு போஜனம் செய்த காலத்தில் இருவரும் ராஜியாய்ப் போனோம்.

பரீட்சை கழிந்து திருநெல்வேலியில் தங்கிய காலத்தில் எங்கள் வாதப் பிரதிவாதம் தலையெடுத்தது. டெல்ஹி காங்கிரஸுக்குப் போகவேண்டுமென்று நான் பிடிவாத

மாய்ச் சொன்னேன். நான் ஒருபொழுதும் போகக் கூடா தென்று அவர் தடுத்தார். அவர் தடுக்கத் தடுக்க எனக்கு வீராவேசம் அதிகப்பட்டது. இறுதியில் அவர் சம்மதம் பெறுமலே போவதற்கு உறுதி செய்தேன்.

ஆனால் யாத்திரைச் செலவுக்குப் பணம் வேண்டுமே! நாஷணலிஸ்டு கட்சியாருக்கு டிக்கற்று இனமாகக் கிடைக் குமா?

என் கையிருப்பைத் திட்டம் செய்ததில் 1ரூபா 3அணு 10பை இருந்தது. இது எதற்குப் பற்றும்? அப்பாவைக் கேட்டால் ஒரு சல்லிக் காசு கூடக் கொடுக்கமாட்டார். அவர் பெட்டிக்குள் "கறன்ஸி" நோட்டுகள் ஏராளமாக வுண்டு. பெட்டிச் சாவியைக் கைவசப் படுத்தவேண்டு மானுல் அதிகப் பிரயாசை யில்லாமலே முடியும். ஆனால் சென்னைச் சர்வகலா சங்கத்தின் 'டிப்ளோமா' தாரியாகிய எனக்குத் திருடுவதற்கு மனத்துணிவு வரவில்லை. என் அம்மா கையிலும் ஏராளமாகப் பணமுண்டு. ஆனால் காங்கிரஸ் யாத்திரைக்குப் பணம் கேட்டால் கொடுப் பாளா? அப்பா என்னைத் தடுத்த சமாசாரமும் அவளுக் குத் தெரியும். இதற்கு என்ன செய்கிறதென்று யோசித் துப் பார்த்தேன்.

'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி, அவள் மனப் போக்கெல்லாம் எனக்குச் செவ்வையாகத் தெரியு மாகையால் ஒரு யுக்தி தற்சமயம் தோன்றிற்று. உடனே மனோல்லாஸ முடையவனுகி அம்மாளண்டை சென்றேன்.

"அம்மா! எனக்கு டெல்ஹி காங்கிரசுக்கு எப்படி யாவது போய்த் தீரவேண்டும்; அப்பாவோ தடுக்கிறுர்.

உடனே அவள் ஒரு குலுக்குக் குலுக்கிக் குதித்து வீட்டுக் குள்ளே நுழைந்தாள். என்னைச் சாடையாகப் பார்த்தும் பாராதவள்போல் போனாள். எனக்கு அன்றுண்டான வருத்தத்துக்குக் கையும் கணக்குமில்லை. சுவாமி தரிசனங் கூடப் பண்ணவில்லை. அழுதுகொண்டே வீட்டிற்குத் திரும்பினேன். டெல்ஹிக்குப் போனால் போலிஸ் சூப்பிரண்டு வேலை கிடைக்குமா?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

நானும் சற்றும் தாழாமல் "அதற்குத் தடையில்லை அம்மா. டிசம்பர் 31உக்குள் காங்கிரஸ் முடிந்துவிடும். ஜனவரி 10உக்குள் இவ்விடம் வருவேன். அதற்குள் கவர்னர் உத்திரவும் இவ்விடம் வந்திருக்கும்" என்று கூறினேன்.

"கலெக்கட்டர் உத்தியோகம் வேண்டாம். சூப்பிரண்டு உத்தியோகம் போதும். நீ சூப்பிரண்டானால் துரைசாமி உனக்குக் கீழேதானே. அப்போதான் அவன் பெண்டாட்டி ருக்கியை அடக்க எனக்கு முடியும். சரி! செருக்கி என் கையில் சிக்கிக்கொண்டாள்! இருக்கட்டும்! உனக்கு யாத்திரைக்கு எத்தனை ரூபா வேணும்" என்றாள் அம்மாள்.

நான் நினைத்தபடி காரியம் நிறைவேறினது பற்றி எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆனாலும் சுத்தாத்மாவான அவளை ஏமாற்றுவது பெரும் பாவமென்று நினைத்தேன். பெற்ற தாயை ஏமாற்றி காங்கிரசுக்குப் போய் என்ன பலன் என்றும் எண்ணினேன். டெல்ஹி காங்கிரஸோ, மிக முக்கியமான காங்கிரஸ். தேசாபிமானி

களை யெல்லாம் ஏக காலத்தில் பார்க்கலாம். ஆகவே பிரயாண ஆசை அதிக மாயிற்று. அம்மாளை ஏமாற்றவும் துணிவு கொண்டேன்.

"ரூபாவா? சொற்பந்தான் வேண்டும். இரண்டாவது வகுப்பில் போகாவிட்டால் அந்தஸ்துக் குறைவு. ரெயில் செலவுக்குப் போக வர உத்தேசம் 300 ரூபாவாகும். நல்ல டிரஸ் இல்லை. அது பட்டணத்தில் போய்த்தான் தைக்கவேண்டும். மூன்று "சூட்டுக்கு"க் குறையாமல் வேண்டும். டெல்ஹியில் பனி ஜாஸ்தி. கம்பளி "சூட்டும்" ஒன்று வேண்டும். எல்லாம் சேர்த்து சுமார் 500 ரூபாவாகும். மேலும் கைச்செலவுக்கும் ஏதாவது வேண்டும்." என்றேன்.

"இவ்வளவுதானா? ஐந்நூறும் மூந்நூறும் எண்ணூறு. கைச்செலவுக்குப் பதினஞ்சு ரூபா போதுமா?" எனக் கேட்டாள் அம்மாள்.

"காங்கிரசுக்குப் போகிறவனுக்குக் கைச் செலவுக்கு 15 ரூபா எப்படி யம்மா காணும்? பட்டணம், கல்கத்தா முதலான இடங்களில் போனால் உயர்ந்த ஹோட்டல்களில் தான் இறங்கவேண்டும். ஒரு நாளைக்கு முப்பது நாற்பது செலவாகும். டெல்ஹியிலும் நாளொன்றுக்கு ஐம்பது அறுபது செலவாகும். காங்கிரசு யாத்திரை யென்றால் பணச்செலவுதான். பணம் போட்டால் தான் பணம் எடுக்கலாம். ஐந்நூறு அறுநூறு சம்பளமுள்ள உத்தியோகம் சும்மா கிடைக்குமா?" என்றேன் நான்.

"என்ன செலவானாலும் ஆகட்டும். துரைசாமி பெண்டாட்டி ருங்கியை அடக்கினால் போதும். மேலாத்து

குப்பாளிடத்தில் 500 ரூபா கொடுத்திருக்கிறேன். எப்போக் கேட்டாலும் தருவாள். பெட்டியிலும் நானூறு ஐந்நூறு இருக்கிறது. செட்டியார் உண்டியல் கடைக்கு ஒரு ஆள் அனுப்புகிறேன். கூடப்போய் தேவையான பணம் வாங்கிக்கொள். அப்பா அறியக் கூடாதென்றும் செட்டியாரிடம் பிரத்தியேகம் சொல்லு. சரி! பணக்காரியத்துக்கு நானாச்சு. அப்பா அறியாமல் ஊர்விட்டு எப்படிப் போக முடியும்?” என்று அம்மாள் ஆவலோடு கேட்டாள்.

டெல்ஹிக்குப் போவதற்கு எனக்குள்ளதைவிட அம்மாளுக்கு ஆத்திரம் அதிகமாய் விட்டது. காரணமெல்லாம் துரைசாமி பெண்டாட்டி ருங்கிதான்.

“அந்தக் காரியம் பிரமாதமில்லை அம்மா! குற்றாலத்துக்குப் போய் இரண்டு வாரம் தங்கி வருவதாகப் போவேன். அப்பா தேடமாட்டார். நான் என்ன சிறு குழந்தையா?” என்று சமாதானம் சொன்னேன்.

அம்மாளும் ஒத்துக்கொண்டாள். அப்பாவிடம் சண்டைபோட்டுப் புறப்படும்படி நேர்ந்தால் கூட அம்மாளுக்குச் சங்கடம் உண்டாகாது. அம்மாளுக்கு அவ்வளவிற்கு ஆத்திரம் பெருகிவிட்டது.

அன்றிரவு தானே 2000 ரூபாவுக்கு கரன்ஸி நோட்டுகள் என் கைவசமாயின. மறுநாள் காலை எட்டு மணி வண்டியில் அப்பா அனுமதியோடு குற்றாலத்துக்குப் பிரயாணமானேன். பத்தரை மணிக்குத் தென்காசிக்குச் சென்று அங்கே யிறங்கி பகல் முழுதும் அவ்விடமிருக்-

தேன். இரவு மூன்று மணிக்குத் திருவனந்த புரத்திலிருந்து வரும் மெயில் வண்டியில் சென்னைக்கு டிக்கற்று வாங்கி ஏறிக்கொண்டேன்.

காலை ஆறு மணிக்குத் திருநெல்வேலிப் பாலத்தில் வண்டி வந்தது. அங்கே அரைமணி நேரம் தாமதமுண்டு. யாராவது கண்டு விடுவார்களோ எனப் பயந்து முக்காடு போட்டு மூடிக்கொண்டு வண்டியில் படுத்திருந்தேன். கடைசியாக வண்டியும் புறப்பட்டது.

மறுநாட் காலை எட்டு மணிக்கு எக்மோரில் இறங்கினேன். 'ரூயல் ஹோட்டல்' கார், பிரயாணிகளுக்காகக் காத்து நின்றது. அதிலேறி ஹோட்டலை அடைந்தேன். ஹோட்டல் அழகை வர்ணிக்கத் தொடங்கினால் ஒரு புராணமாகும். தேவலோகம்போல் இருந்தது. காலைக்கடன் முடித்து, சாப்பாடு கழிந்து பதினொரு மணிக்கு ஒரு காறிலேறி ஸ்பென்ஸர் தையல் ஷாப்புக்குச் சென்றேன். "ட்வீட்சூட்டு" இரண்டுக்கும் "சில்க்சூட்டு" ஒன்றுக்கும் கம்பளி "சூட்டு" ஒன்றுக்கும் ஆர்டர் கொடுத்தேன். 500 ரூபாவுக்கு பில் கொடுத்தார்கள். முழுத்தொகையும் அப்பொழுதே கொடுத்து விட்டேன். மறுநாள் மாலை 5 மணிக்கு சூட்டுகளை ஹோட்டலுக்கு அனுப்புவதாக ஷாப் மானேஜர் சொன்னார்.

காறில் ஏறி ஹோட்டலுக்குப் போக எத்தனிக்கும் போது ஷாப்பினுள்ளே உலாவிக் கொண்டிருந்த ஒருவர் வந்து "நீங்கள் டெல்ஹி காங்கிரசுக்குப் போகிறீர்களா" எனக் கேட்டார்.

"ஆமாம்! தாங்கள் யார்?" என்றேன் நான்.

வந்தவர்.—“நானு? நான் காஞ்சீபுரம் வேதாந்தாச்சாரி. நானும் டெல்ஹிக்குத் தான் போகிறேன். தங்களைக் கண்டது நல்ல காலந்தான். இருவருக்கும் பரஸ்பரம் நல்ல துணை தானே” என்றார்.

எனக்கு அடக்கமுடியாத சந்தோஷமுண்டாயிற்று. அவரையும் காரில் ஏற்றிக்கொண்டு ஹோட்டலுக்குப் புறப்பட்டேன். வழி நெடுக உல்லாசமாகப் பேசிக்கொண்டு போனோம். அவரும் என்னைப் போலவே ஒரு வீரமுடைய நாஷனலிஸ்டு. என்னைவிட அவர் ஒரு படி கூட என்று தான் சொல்லவேண்டும். ஆகவே அவரைத் தற்செயலாய்க் கண்டது பழம் நழுவிப் பாலிற் விழுந்தாற்போலாயிற்று. ஹோட்டலில் மாலை நாலு மணிவரைப் பேசிக்கொண்டிருந்தோம். கல்கத்தா வழி போகத் தீர்மானம் பண்ணினோம். பெஜவாடாவில் அவருடைய சிநேகிதர்கள் இருவர்கள் வரத் தயாராயிருப்பதாகவும், அவ்விடம் இறங்கி அவர்களையும் அழைத்துக்கொண்டு மறுநாள் பிரயாணமாகவேண்டுமென்றும் அவர் வேண்டிக்கொண்டார். நானும் சம்மதித்தேன். மறுநாள் மாலை வருவதாக விடைபெற்று அவர் ஜாகைக்குச் சென்றார். நானும் பிரயாணக் களைப்பினால் ஏழு மணிக்கே தூங்கப் போனேன்.

மறுநாள் மாலை நாலு மணிக்கு வேதாந்தாசாரியும் வந்து சேர்ந்தார். ஐந்து மணிக்கு சூட்டுகளும் வந்தன.

நாங்களும் ஏழு மணிக்கு சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று பெஜவாடாவுக்கு டிக்கற்று வாங்கி வண்டியிலேறி உட்கார்ந்தோம். வண்டியும் செல்லத் தொடங்கிற்று. சிறிது நேரத்தில் நான் தூங்கி விட்டேன். சுமார் மூன்று

மணிநேரம் கழிந்ததும் வேதாந்தாச்சாரி என்னைத் தட்டி எழுப்பினார். விழித்தவுடனே பெஜவாடா ஸ்டேஷன் வந்து விட்டதாகச் சொன்னார். இருவரும் வெளியிலிறங்கினோம். ஸ்டேஷனுக்கு வெளியே வந்தவுடன் ஒரு வண்டி எங்களுக்காகக் காத்து நின்றது. அதில் இருவரும் சாமான்களோடு ஏறினோம். நல்ல இருட்டு; பனியும் ஜாஸ்தி. நான் கண்ணை மூடிக்கொண்டே வண்டிக்குள் உட்கார்ந்திருந்தேன். சுமார் ஒருமணி நேரம் சென்றதும் வண்டி நின்றது. இறங்கும்படி வேதாந்தாச்சாரி சொன்னார். நானும் இறங்கினேன். சுற்றும் பார்க்கவே ஒரு காடுபோலத் தோற்றிற்று. "வீடுகள் ஒன்றையும் காணோமே?" என்று நான் வாய்திறக்கு முன்னமே என் தலையில் ஒரு அடி விழுந்தது. நானும் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தேன்.

* * * * *

கண்விழித்துப் பார்த்தபோது அப்பா பக்கத்தில் சங்கடத்தோடு உட்கார்ந்திருக்கிறார். நான் ஒரு கட்டிலில் கிடக்கிறேன். தலையில் பலமாகத் துணி கட்டியிருக்கிறது. பரப்பரக்க விழித்தேன். "அப்பா எங்கே இருக்கிறேன்" என்று வெகு பிரயாசையோடு கேட்டேன். எனக்குப் பேச முடியவில்லை. அப்பா பதிலுரைக்கவில்லை. பேசாமல் கிடக்கும்படி சைகை காட்டினார். அப்பொழுதுதான் என் நிலைமை எனக்கு விளங்கிற்று. பேசமுடியாமல் சும்மா கிடந்தேன்.

மூன்றாம் நாள் பேச சக்தி வந்தது. அப்பொழுது சங்கதிகள் எல்லாம் அறிந்தேன்.

நான் திருநெல்வேலி விட்டுப் புறப்பட்ட நான்காம் நாள், என்னை மதுரை ஸ்டேஷனில் கண்டதாக, மதுரைக்கு வந்திருந்த திருநெல்வேலிக்காரன் ஒருவன் அப்பாவிடம் சொன்னானாம். உடனே அப்பாவுக்கு சந்தேகம் பிறந்து குற்றாலத்துக்கு ஆளனுப்பி விசாரிக்க, அங்கே நானில்லை யென்றறிந்து, டெல்ஹிக்குத்தான் போயிருப் பேனென்று ஊகித்துக்கொண்டு ஸி. ஐ. டி. க்கு தந்திமூலம் தெரிவித்துவிட்டு, நான் சென்னையிலிருந்து பிரயாணமான நாட் காலையில் சென்னைக்கு வந்தாராம்.

ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர்கள் உதவியோடு என் னைத்தேடி சென்னை முழுதும் அலைந்தாராம். கடைசியாக நாங்கள் சென்ட்ரல் ஸ்டேஷனில் பஜவாடாவுக்கு டிக்கற்று வாங்கிய சமாசாரம் வண்டி போவதற்கு இரண்டு நிமிஷத் துக்கு முன்னே அறிந்தாராம். வண்டியில் தேட நேரம் இல்லாததினல் அப்பாவும் இரண்டு ஸி. ஐ. டி. உத்தியோ கஸ்தர்களும் மூன்றுவது வகுப்பு டிக்கற்று பஜவாடாவுக்கு வாங்கி, வண்டியில் ஏறினார்களாம். நாங்கள் இரண்டாவது வகுப்பு டிக்கற்று வாங்கியிருந்ததனல், பஜவாடா ஸ்டேஷ னில் வண்டி நின்றதும் விரைவாக இறங்கி இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் வெளியே போகும் வழியாக வெளி வந்து, வண்டி சித்தமா யிருந்ததினல் உடனே புறப்பட் டோம். அப்பாவும் ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர்களும் மூன் ருவது வகுப்புப் பிரயாணிகள் வெளியேபோகும் வழியாக வந்து, எங்களைப்பற்றி விசாரித்து, வண்டி தேடிப் புறப்படச் சிறிது தாமத மாயிற்று. அவர்களும் எங்களை விரைவாகப் பின் தொடர்ந்து வந்தார்கள். அவர்கள் நான்கிடந்த இடத்

தை அடைந்த போது நான் போதமற்றுக் கிடந்தேனும். வண்டியும் மாயமாய் மறைந்துவிட்டது. வேதாந்தாச்சாரி யையும் இதுவரையிலும் காணவில்லை. என் சூட்டுகேஸையும் பணத்தையும் அவன்தான் கொண்டுபோயிருப்பானென்று சொல்லவேண்டிய தில்லையே.

வேதாந்தாச்சாரி சென்னையிலுள்ள ஒரு பக்கா கேடியாம். நாலைந்து பாஷையும் தெரியுமாம். பெயர்போன பரிஷ்காரக் கள்ளனும். எவ்வளவோ இனும் கொடுப்பதாக அப்பா பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். ஒரு பயனும் உண்டாகவில்லை. வேதாந்தம் செட்டாலுக்கோ பினங்குக்கோ கெனியாவுக்கோ போய்விட்டதாக வதந்தி.

அவன் படுபாவி எங்கே போனாலென்ன? என் தாயார் துன்பம் தீருமா? ரூபா போனதைப்பற்றி அவளுக்குச் சங் கடமே யில்லை. துரைசாமி பெண்டாட்டி ருங்கியை அடக்க முடியாமல் போனது தான் அவளுக்கு ஆறாத் துயரம்!

என்ன செய்யலாம்!

மைனாவும் கிளியும்

ஸ்ரீமதி பொன்னம்மாள் எழுதியது.

பண்டைக்காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு உழவன் இருந்தான். அவனுக்கு அங்கப்பன் என்று ஒரு மகனும் பூமேனி என்று ஒரு மகளும் இருந்தார்கள். அவர்கள் காலைதோறும் கிராமத்தின் பக்கத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்துக்குச் செல்வார்கள். அவர்கள் போகும் பாதையின் இரு மருங்கும் பற்பல கொடி செடிகள் நிறைந்திருந்தன. இருவரும் பள்ளிக்குப் போகும்போது கொடி செடிகளில் உள்ள புஷ்பங்களையும் காய் கனிகளையும் பறித்து விளையாடிக் கொண்டே போவார்கள்.

ஒருநாள் காலையில் இருவரும் வழக்கம் போல் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டார்கள். தாயார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அப்பத்தைக் கொடுத்து அனுப்பினாள். அவர்கள் அதை வழி நெடுகத் தின்று கொண்டும், பூ காய்களைப் பறித்துக் கொண்டும், வெகு உல்லாசமாக விளையாடி விளையாடிச் சென்றார்கள். உடனே அவர்கள் முன்னே ஒரு கிளி பறந்து வந்து விழுந்தது

நீ தின்றது போதும், தயவு செய்து கொடு" என உருக்கமாய்ப் பூமேனி மன்றாடினாள்.

அங்கப்பன் குலுங்கக் குலுங்க நகைத்தான். "நான் உன்னைப் போல் முட்டாள் அல்ல. காடு நிறையக் காய் கனிகள் இருக்கின்றன. மைனாவுக்குப் பசி அதிகமாயிருந்தால் அவைகளைப் போய்த் தின்னட்டும். காட்டுப் பறவைகளுக்கெல்லாம் தீனி கொடுப்பது நம்முடைய வேலையா? எனக்கே ஆறவில்லையே!" என்றான் இரக்கமில்லாத அங்கப்பன்.

"அண்ணா! அண்ணா! அப்படிச் சொல்லாதே. ஒரு சிறு துண்டாவது கொடு. அது எவ்வளவு வருத்தப் படுகிறது பார். கொஞ்சமாவது கொடு" என்று பூமேனி பின்னும் சொன்னாள். மைனாவும் அவள் சொல்வதை ஒப்புக் கொண்டதுபோல் கீச்சிட்டது.

"அப்படியா, சரி, கொடுக்கிறேன்" என்று சொல்லி அங்கப்பன் தன் சேப்பில் கிடந்த ஒரு காகிதத்தை எடுத்துத் துண்டு துண்டாய்க் கிழித்து மைனாவுக்கு நேரே எறிந்தான்.

மைனா ஒன்றிரண்டு காகிதத் துண்டை ஆத்திரத்தோடு கொத்தி, உடனே கீழே போட்டு விட்டது. பின் அது தான் ஏமார்ந்து போனதை எண்ணி வருந்துவது போல் கீச்சிட்டுக் கொண்டும் சிறகை அடித்துக் கொண்டும் பறந்து போயிற்று.

அது பசியால் வாடி இளைத்திருந்தது போல் தோற்றிற்று. கிளி அவர்கள் கையில் இருந்த அப்பத்தைப் பார்த்துக் கொண்டே அவர்களைச் சுற்றிச் சுற்றிப் பறந்தது.

பூமேனி தன் அப்பத்தில் முக்கால் பங்குக்கு மேல் தின்று விட்டாள். என்றாலும் அவள் பசி தணியவில்லை. ஏழைக் கிளியோ அவர்களைச் சுற்றிப் பறந்து கொண்டேயிருந்தது. கிளியின் இரக்கமான தோற்றத்தைப் பார்த்து, பூமேனி தன்கையில் இருந்த அப்பத்தை அதற்கு நேரே எறிந்தாள். கிளி அதை ஆவலோடு பற்றி, அவர்களுக்கு வந்தனம் சொல்வது போல் சப்த மிட்டுப் பறந்தது.

“பூமேனி! நீ என்ன முட்டாளாய் இருக்கிறாய்! என் அப்பம் உன் அப்பத்தை விட எவ்வளவோ பெரிது. என்றாலும் என் பசி அடங்கவில்லை. உன் சிறு அப்பத்தில் ஒரு பகுதியைக் கிளிக்குக் கொடுத்தாயே, உன் பசி எப்படி அடங்கும்? சீச் சீ! நீ பயித்தியக்காரி” என்றான் அங்கப்பன்.

பூமேனி விடை கூறத் தொடங்குமுன் ஒரு மைனா அவர்கள் முன் பறந்து வந்தது. அதுவும் கிளியைப் போல் அப்பத்தைப் பார்த்துக் கொண்டே சுற்றிச் சுற்றிப் பறந்தது.

“ஐயோ! இந்த மைனாவும் கிளியைப் போல் பசியால் வாடியிருக்கிறது. அண்ணா! உன் அப்பத்தில் கொஞ்சம் அதற்குக் கொடு, ஏழைப் பிராணி! அதற்கு யார் தஞ்சம்?

"அண்ணு! நீ இவ்வளவு துஷ்டனு? ஏழைப் பற வையை ஏமாற்றிணுயே! உனக்குக் கிடைத்த லாபம் என்ன? சீச்சீ! கேவலம்" என்று வெகு கோபத்தோடு பூமேனி சொன்னுள்.

உடனே பள்ளிக்கூடத்தில் மணி அடிக்கும் சப்தம் அவர்கள் காதில் விழுந்தது. இருவரும் பள்ளிக்கூடத்தை நோக்கி வேகமாய் ஓடினுர்கள். மணி அடித்து 10-நிமிஷம் கழிந்த பிறகே அவர்கள் வகுப்புக்குள் நுழைய நேர்ந்தது. ஆகையால் வகுப்புப் பிள்ளைகளுக் கெல்லாம் கடைசியாக அவர்கள் நிற்க வேண்டியதா யிற்று.

உணர்ச்சி யில்லாத அங்கப்பன் சிறிதேனும் வெட்க மின்றித் தடிபோல் நின்றுன். வகுப்பில் நிற்கும்படி நேர்ந்ததனுல் உண்டான வெட்கத்தாலும், அங்கப்பன் ஏழைப் பறவையை ஏமாற்றியதனுல் உண்டான மனவருத் தத் தாலும் பூமேனி பெரிதும் வாடி னின்றுள்.

நாலு-மணி ஆனவுடன் பள்ளிக்கூடம் கலைந்தது. பூமேனியும் அங்கப்பனும் வீட்டை நோக்கி நடந்தார்கள். பாதி வழியில் வந்தவுடன் ஒரு கிளி அவர்கள் முன் பறந்து வந்தது. அது அவர்களைக் கண்டு அஞ்சி ஓடவில்லை, பூமேனி யின் வலது தோளில் உட்கார்ந்தது. அவள் அதை மெல்லப் பிடித்தாள். "அண்ணு? இன்று காலையில் வந்த கிளி தான் இது. சந்தேகமில்லை" என்றுள்.

அங்கப்பன் வெருண்டு பார்த்தான். சாமானிய விஷயங் களுக்கு ஆச்சரியப் படாதவன் போல் பாசாங்கு செய்வது

அவன் வழக்கம். ஆகையால் ஒன்றும் மறுமொழி கூற வில்லை. இதற்குள் கிளி மெல்ல மெல்ல அவள் கையி லிருந்து நழுவி, வலப்புற மிருந்த ஒரு சிறு காலடிப் பாதை யிற் சென்று இவர்களை அவ் வழி அழைக்கும் பாவனையாகக் கீச்சிட்டது.

" அது நம்மை அந்தப் பக்கம் அழைக்கிறது " என் ருன் அங்கப்பன்.

" எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது. நமக்குப் போக நேரம் இருக்கிறதா? நாம் போகத் தான் வேண் டுமா ?" என்ருள் பூமேனி.

" ஆம். போகத் தான் வேண்டும்; நீ பயப் படுகிருயா? பெண்களுக்கு எப்பொழுதும் பயந்தான் முந்தி நிற்கும்" என்று அங்கப்பன் கேலியாகக் கூறினுன். அவன் எப்பொழு தும் தைரிய சாலி நாடகம் ஆடுவதில் வெகு ஸமர்த்தன்.

இருவரும் அந்த ஒற்றையடிப் பாதை வழியாக நடந் தார்கள். கிளியும் அவர்கள் முன்னே மெல்ல மெல்லப் பறந்து சென்றது. பாதையின் இரு பக்கமும் பல அழகிய கொடி செடிகள் நிறைந்திருந்தன. பல நிறமான புஷ்பங் கள் காற்ருல் அலைப்புண்டு இவர்களுக்கு நல்வரவு கூறி ஆர்ப்பாது போல் ஆடின.

சிறிது நேரம் நடந்த பிறகு ஒரு வேலியைச் சந்தித் தார்கள். அந்த வேலி உலர்ந்த சுள்ளிகளால் கட்டப்

பட்டிருந்தது. அநேக கொடிகள் அவ் வேலிமேல் படர்ந்து புஷ்பித்து அழகு செய்தன. வேலியை அடைந்ததும் கிளி அதன் மேல் உட்கார்ந்து ஒரு மாதிரி இரைந்து உரக்கக் கீச்சிட்டது. உடனே அது போன்ற ஒரு கீச்சுக் குரல் வேலிக்குள்ளிருந்து கிளம்பி வந்தது. குரல் நிற்பதற்கு முன் ஒரு மைனா அவர்கள் முன் தோன்றிற்று.

தோன்றவே இரண்டு பறவைகளும் சேர்ந்து, சுற்றிச் சுற்றிப் பறந்து வெகு ஸந்தோஷத்தோடு கத்தின. நமது பூமேனியும் அங்கப்பனும் இப் பறவைகளின் கோலாஹலத்தைக் கண்டு மிக வியப் படைந்தார்கள்.

பிறகு பறவைகள் இரண்டும் சிறிது மேற்கு நோக்கிப் பறந்தன. இவர்களும் பின் சென்றார்கள். பறவைகள் சிறிது தூரம் பறந்த பிறகு அவ் வேலியிலுள்ள ஒரு சிறு தொண்டு வழியாக உள்ளே சென்றன.

அங்கே எவ்வளவு ஆநந்தமான காட்சி! பால் போலும் வெண்ணிறமான நிலக் காளான்கள் அங்கு மிங்கும் அநேகம் வளர்ந்திருந்தன. மத்தியில் ஒரு பெரிய நிலக் காளான் வளர்ந்திருந்தது. பறவைகள் இரண்டும் அப்பெரிய நிலக் காளானருகே சென்று கூச்சலிட, அக் காளானுள்ளிருந்து ஒரு அடி உயரமுள்ள ஒரு குள்ளன் வெளியே வந்தான். அவன் வெளியில் வந்ததும் பறவைகள் முன்னிலும் பதின் மடங்கு கூக்குர லிட்டுக் கொண்டு மேலே பறந்து மறைந்தன.

அந்தக் குள்ளன் ஒரு ராஜனாகத் தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அவன் தலையில் இரத்தினங்கள் இழைத்த ஒரு பொன் மகுடம் ஜொலித்து விளங்கியது. அழகான ஜரிகை வேலைப் பாடமைந்த வெல்வட் அங்கியும் தரித்திருந்தான்.

அவன் குழந்தைகளைக் கண்டு ஆநந்த மடைந்தவன் போல் அன்பாய்ப் பார்த்தான்.

"இது வரையிலும் என் அரண்மனைக்குள்ளே மனிதர்கள் ஒருவரும் வந்த தில்லை. உங்கள் வரவு தான் முதல் வரவு" என அக் குள்ளன் புன் முறுவலோடு சொன்னான்.

"நாங்கள் இங்கே வந்ததற்கு வருந்துகிறோம். நீங்கள் இங்கே இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டோம். இப்பொழுதே போய் விடுகிறோம், மன்னிக்க வேண்டும்" என்று பூமேனி பணிவாய்ப் பதில் சொன்னாள்.

"குழந்தைகளே! நீங்கள் வருத்தம் அடைய வேண்டாம். உங்கள் வரவு எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வந்ததே வந்தீர்கள். என் அரண்மனை முழுதும் சுற்றிப் பாருங்கள். இன்று என் குடிகளெல்லாம் எனக்குத் திறை செலுத்தும் நாள் என். பின் வாருங்கள். வந்து பாருங்கள்" என்று கூறிக் கொண்டே குள்ளன் நடக்க லானான். குழந்தைகளும் அவன் பின் சென்றார்கள். குள்ளன் ஒரு காளா னருகே நின்று அதில் தொங்கிக் கொண்டிருந்த திரையை நீக்கினான். அங்கே அவனைப்

"அண்ணா! போதாதா? இனி எங்கே வாரிக் கட்டப் போகிறாய்? நேரம் சென்றுவிட்டது. போவோம் வா."

இருவரும் புறப்படத் தொடங்கினார்கள்.

உடனே குள்ளன் அங்கே கிடந்த ஒரு பைக்குள் பவுன்களை வாரி அடைத்து, பூமேனியிடம் சென்று—"குழந்தாய்! இதை வைத்துக்கொள். நான் கொடுத்த பரிசாக இருக்கட்டும்" என அன்பாய்க் கூறினான். பூமேனி அதை வாங்கிப் பன்முறை வந்தனம் சொன்னாள்.

இருவரும் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள். பூமேனி சந்தோஷமடைந்தாளாயினும் வாயில் வந்தபடி உளறிக் கொட்டவில்லை. அங்கப்பன் பொன் வெறி பிடித்தவன் போல் புலம்பத் தொடங்கினான்.

"இனி நான் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன். நாளைக் காலையில் ஒரு ஸைக்கில் வாங்குவேன். நாடகம் பார்க்க ஒரு நாளாவது தவற மாட்டேன். நம்முடைய வீடு குச்சு வீடு. பணக்காரன் ஆன பிறகு அதில் இருக்கக் கூடாது. ஒரு பெரிய 'பங்களா' வாங்குவேன். நாலைந்து வேலைக்காரர்களையும் வைத்துக் கொள்வேன். பாயஸம் லட்டு, லாடு, பூந்தி, ஆமவடை இல்லாமல் சாப்பிடவே மாட்டேன். பட்டுச் சட்டை தான் எப்பொழுதும் அணிவேன்." என்றெல்லாம் அங்கப்பன் வழி நெடுகப் புலம்பிக் கொண்டே போனான்.

கொஞ்சதூரம் சென்றதும் அவனுக்குப் பவுன் பாரத்தினால் நடக்க முடியவில்லை. "ஐயோ! என் கழுத்து முறிந்து போகும்போலிருக்கிறது. சட்டைப் பை இரண்டும் என்னைக் கீழே இழுக்கின்றன. அடிமடிப் பாரம் பொறுக்க முடியவில்லை. சற்று உட்கார்ந்து போவோம்" என்று அங்கப்பன் உட்கார்ந்தான்.

"அண்ணா! புஸ்தகப் பையை என்னிடம் கொடு. நான் வைத்துக் கொள்கிறேன். என்னிடம் அதிகப் பாரம் இல்லை" என்றாள் பூமேனி.

"உன்னிடம் தரவா? பேஷ்! பேஷ்!! நீ பவுன்களைத் திருடிக்கொள்வாய். வேண்டவே வேண்டாம். நானே சுமக்கிறேன்" என்று அங்கப்பன் வெறுப்பாய்ச் சொன்னான்.

பூமேனி கோபித்துக் கொள்ளவில்லை. அவனுடைய அசட்டுக் குணங்கள் எல்லாம் அவளுக்கு நன்றாகத் தெரியும்.

பின் இருவரும் நடந்து வீட்டை அடைந்தார்கள்.

அவர்கள் தாயார் அவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு வீட்டுத் தலைவாயிலில் நின்றாள். பணச் செருக்கினால் இறுமாப் படைந்த அங்கப்பன் தாயாரை இடித்துத் தள்ளிக் கொண்டே 'மடமட' வென்று வீட்டுக்குள் பாய்ந்தான். தாயார் கோபிப்பாளோ என்று பயந்து கொண்டு பூமேனியும் மெள்ள வீட்டுக்குள் நுழைந்தாள்.

அங்கப்பன் களைப்பினால் கட்டிலில் சாய்ந்து கிடந்தான்.

" அங்கப்பா! என் இவ்வளவு தாமதம்? நீ விளையாடி விளையாடிப் பூமேனியையும் கெடுத்து விடுவாய்" என்று தாயார் கோபத்தோடு சொன்னள்.

" தாமதித்தால் குடி கெட்டா போகிறது? நான் பணக் காரன் ஆய் விட்டேன். நாளை முதல் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன்" என்று அங்கப்பன் துடுக்காய்ச் சொன்னன்.

அம்மாள் பரக்கப் பரக்க விழித்தாள். அங்கப்பன் அன்று நடந்த ஸம்பவங்களை யெல்லாம் ஸவிஸ்தாரமாகச் சொன்னன்.

அவன் சொற்களைக் கேட்ட தாயார்—" அடே உனக் குப் பயித்தியம் பிடித்து விட்டது. பணமும் நீ கெட்ட கேடும்! அப்பா வரட்டும்; நல்ல பிரம்புப் பூசை கொடுக்கச் சொல்லுகிறேன்" எனக் கோபத்தோடு சொன்னள்.

" எனக்கா பயித்தியம்? இதோ பார்!" என்று தன் சேப்புக்குள் அங்கப்பன் கையைப் போட்டான். ஐயோ! என்ன பரிதாபம்! அங்கே பவுனு மில்லை. கிவுனு மில்லை. உருளைக் கற்கள் ஏராளமாய் இருந்தன. அடி மடியில் கையைப் போட்டான். அங்கே சரல் கற்கள். கடைசியாகப் புஸ்தகப் பையை அவிழ்த்துக் கோபத்தோடு தலை கீழாய்க் கொட்டினன். பைக்குள்ளே செங்கற் பொடியும், ஓட்டுத் துண்டுகளும் நிரம்பி யிருந்தன. மைனவைப் போல அங் கப்பனும் ஏமார்ந்து போனன்.

ஒரு மூலையில் பதுங்கி நின்ற பூமேனி "அம்மா! இதோ பார்! என்னுடையவை யெல்லாம் பவுன்களாகவே இருக்கின்றன," என்று சந்தோஷத்தோடு கூறினாள்.

ஆம்! பூமேனி பையில் பவுன்களே நிறைந்திருந்தன.

அங்கப்பன் அழத் தொடங்கினான். குள்ளன் ஏமாற்றி விட்டானென்று அவனை வாயில் வந்தபடி யெல்லாம் திட்டினான்.

"அடே! குள்ளனை ஏன் திட்டுகிறாய்? நல்ல பிள்ளைகளுக்குப் பரிசளிக்கவும் கெட்ட பிள்ளைகளைத் தண்டிக்கவும் வன தேவதைகளுக்கு நன்றாகத் தெரியும். உன் குறும்புக் குணத்துக்குத் தக்க பலன் கிடைத்தது" என்றாள் தாயார்.

அன்று முதல் அங்கப்பன் நல்லவன் ஆக முயற்சி செய்தான். பிள்ளைகளே, நீங்கள் என்றும் நல்லவர்களாக இருங்கள்.

நமது நாட்டின் தற்கால வறுமையும்,
சிறுமையும் நீங்கிப் பெருமை அடையுமாறு,
நாடெங்கும் லக்ஷ்மியைப் பூஜை செய்யுங்கள். எங்கள்

"லக்ஷ்மி"

என்ற மாதப் பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.

எங்கள் "லக்ஷ்மி" சித்திரப் படங்களுடன் கூடிய பத்திரிகை.

சிறந்த தமிழ் அறிஞர்கள் 'லக்ஷ்மி' யில் வியாசங்கள் எழுதுகிறார்கள்.

எல்லோரும் விரும்பும் பல நல் விஷயங்கள் லக்ஷ்மியில் வெளி வருகின்றன.

உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள்.

உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள்.

லக்ஷ்மி உங்களைத் தேடி வருகின்றாள்.
அவளை அன்புடன் எதிர்கொண்டழையுங்கள்.

மாதிரிப் பிரதி இரண்டணா. மாதிரிப் பிரதியைப் பார்வையிட்ட பின் நீங்கள் சந்தாதாரராவது நிச்சயம்.

உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக!

வருட சந்தா உள் நாடு	ரூ.	2 0 0
வெளி நாட்டிற்கு	,,	2 8 0

விலாசம்:—

மானேஜர்,
"லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.

...T VEST MADRAS.

Clark